

இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் பகுதியில் நடைபெற்ற மீனவர் நலவாரிய உறுப்பினர் சேர்க்கை முகாமில் பங்கேற்று மீனவர் நல வாரியத் தலைவரும் கழக மீனவர் அணி செயலாளருமான அ. ஜோசப் ஸ்டாலின் சிறப்புரையாற்றினார். உடன் மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ரவிச்சந்திர ராமவன்னி நல வாரிய உறுப்பினர்கள் என்.ஏ. போஸ், வி.பி. சேசுராஜா, ஸ்டெல்லா, இருதயமேரி, லிலேபர் ஒன்றியச் செயலாளர் பாண்டி ஆகியோர் கலந்து கொண்டனர்.



திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு நெல்லை டவுண் வ.உ.சி.தெருவில் அமைந்திருக்கும் திருவள்ளுவர் சிலைக்கு முன்னாள் அமைச்சர், நெல்லை மத்திய மாவட்ட முன்னாள் பொறுப்பாளர்,கழக மாநில சிறுபான்மை நலஉரிமைப்பிரிவு தலைவர் டி.பி.எம்.மைதீன்கான் தலைமையில் மேயர் ராமகிருஷணன், நெல்லை கிழக்கு பகுதி பொறுப்பாளர் நமசிவாயம் ஆகியோர் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. திருக்குறள் மனப்பாடம் செய்த 50ற்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு 27 வார்டு மாமன்ற உறுப்பினர் உலகநாதன் ஏற்பாட்டில் ஜாமென்ட்ரி பாக்ஸ்,திருக்குறள் புத்தகம்,டிஷ்னரி உள்ளிட்ட பரிசுகள் வழங்கப்பட்டது. நிகழ்வில் அணி அமைப்பாளர்கள் ஆதி திராவிட நலக்குழு நவநீதன், வர்த்தக அணி சேக்தாவூது, வட்டக்கழக செயலாளர்கள் இசக்கி, முத்துராமன்,குமரேசன்,நாதன்,நெல்லை பகுதி அவைத்தலைவர் சுப்பையா,தலைமைக்கழக பேச்சாளர்கள் இலக்கிய அணி மாவட்ட தலைவர் நெல்லை ரவி,திராவிட மணி,மாவட்ட பிரதிநிதி சுரேஷ், தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் கள் மு.காதர்ஒலி,காசிமணி, உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.



தேனி வடக்கு மாவட்டம் போடிதொகுதி மேற்கு ஒன்றியம் கிழக்கு ஒன்றியம் சார்பில் சமத்துவ பொங்கட்டும் தமிழ்நாடு வெல்லட்டும் திராவிட பொங்கல் முன்னிட்டு வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. ஆலோசனைப்படி முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மேற்கு ஒன்றிய செயலாளர் லட்சுமணன், கிழக்கு ஒன்றிய செயலாளர் ஐயப்பன் ஆகியோர் தலைமையில் போடி தொகுதி மேல சொக்கநாதபுரம் பகுதியில் மாவட்ட அளவிலான கபடி போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு தேனி வடக்கு மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் கே.மகேஸ்வரன் நான்காம் பரிசு வழங்கினார். மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.




தேனி தெற்கு மாவட்டம் கம்பம் நகராட்சி சார்பில் நகராட்சி அலுவலகத்தில் சமத்துவப் பொங்கல் நகர மன்ற தலைவர் வனிதா நெப்போலியன். தலைமையில் நடைபெற்றது சிறப்பு விருந்தினராக வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்பி கலந்துகொண்டு தூய்மைப் பணியாளர்களுக்கு பொங்கல் தொகுப்பு வழங்கினார். உடன் அரசு அதிகாரிகள் நார்மண்ற உறுப்பினர்கள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி வடக்கு மாவட்டம் விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதி,புதூர் ஒன்றிய,பேரூர் திமுக சார்பில் புதூரில் திராவிட பொங்கலை முன்னிட்டு,கபாடி போட்டியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ. வி. மார்கண்டேயன் துவக்கி வைத்தார்.நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் செல்வராஜ், ராதாகிருஷ்ணன், மும்மூர்த்தி, சின்னமாரிமுத்து, அன்புராஜன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கலந்து கொண்டனர்.

## மாற்றுக் கட்சியினர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்!

# கிருஷ்ணகிரியில் ரூ.1 கோடியே 30 லட்சத்தில் எலக்ட்ரிக் ஸ்கூட்டர்கள்!

### வாக்குச்சாவடி முன்கள பணியாளர்களுக்கு - அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கினார்!

கிருஷ்ணகிரி, ஜன. 19 - கிருஷ்ணகிரியில் மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. முன்னிலையில் நடைபெற்ற மாற்றுக் கட்சியிலிருந்து ஆயிரம் பேர் கழகத்தில் இணைந்தனர்.

வாக்குசாவடி முன்கள பணியாளர்கள் 200 பெண்களுக்கு 1 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பிலான எலக்ட்ரிக் ஸ்கூட்டர்களை அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கினார்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாற்றுக் கட்சியினர் 1,000 பேர் தி.மு.க.வில் இணையும் இணைப்பு விழா மாவட்ட செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் காவேரிப்பட்டணம் ஒன்றியம், சாப்பரம் கிராமத்தைச் சேர்ந்த சமூக சேவகர் சங்கர்தர்மன் ஏற்பாட்டில் மாவட்ட முழுவதும் இருந்து அ.தி.மு.க,, பா.ஜ.க. உள்ளிட்ட பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் அந்த கட்சிகளில் இருந்துவிலகிகிருஷ்ணகிரி மாவட்டப் பொறுப்பு அமைச்சரும், தமிழக உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சருமான அர.சக்கரபாணி முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்.

மேலும் இந்த நிகழ்ச்சியில், வரக்கூடிய சட்டமன்ற தேர்தலில் கிருஷ்ண கிரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த வாக்குசாவடி முன்களப் பணியாளர்களாக பணியாற்றி வரும் (BLA, BDA) வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் வாக்குச்சாவடியின் டிஜிட்டல் முகவர்கள் 200 பெண்களுக்கு 1 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பிலான இலவச எலக்ட்ரிக் ஸ்கூட்டர்கள் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக மாவட்ட செயலாளர் மதியழகன் எம் எல் ஏ ஏற்பாட்டில் மாண்புமிகு அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ், மாநில விவசாய அணி துணை செயலாளர் டேம். வெங்கடேசன், மாநில வர்த்தக அணி துணை செயலாளர்கள் சீனிவாசன் , அன்பரசன் மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி , சாவித்திரி கடலரசுமூர்த்தி, பொருளாளர் கதிரவன், தலை மைச் செயற்குழு உறுப்பினர்கள் செந்தில் , கிருபாகரன் பொதுக்குழு உறுப்பினர்கள் நாகராசன், சித்ரா சந்திரசேகர்,

கோதண்டன், கிருஷ்ணகிரி நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம் ,வேல்மணி ஒன்றிய செயலாளர்கள் தனசேகரன், மகேந்தி ரன், தேங்காய் சுப்பிரமணி, சரவணன், சாந்தமூர்த்தி, ராஜேந்திரன் ,அறிஞர், நரசிம்மன், குண. வசந்தரசு , எக்கூர் செல்வம், குமரேசன், ரஜினி செல்வம், பேரூர் கழக செயலாளர்கள் தம்பிதுரை, வெங்கடப்பன், சாஜித், பார்த்திபன் மற்றும் அணிகளை அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் ஏராளமானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### த. முத்துராமலிங்கம்

**சனவரி 19 (2019)**



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

முதுகுளத்தூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் – பொதுக்குழு உறுப்பினர் – தலைமைச் செயற்குழு உறுப்பினர் – மாவட்ட துணைச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

இராமநாதபுரம் மத்திய கூட்டுறவு வங்கித் தலைவராகவும் – மாவட்ட கவுன்சிலராகவும் பொறுப்பு வகித்தவர்.


கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பி. மன்னார்

**சனவரி 19 (1991)**



கழகம் தொடங்கியபோதே உறுப்பினராகி பணியாற்றியவர்.

முதன்முதலாக தான் வசிக்கும் வடபெரும்பாக்கம் பகுதியில் கிளைக் கழகத்தை தொடங்கி அதன் செயலாளராக பொறுப்பு வகித்து தொடர்ந்து இருபது ஆண்டுகள் கிளைச் செயலாளர் பொறுப்பு வகித்தவர்.

வடபெரும்பாக்கம் ஊராட்சி மன்ற உறுப்பினராகவும், ஊராட்சி மன்ற துணைத் தலைவராகவும் பொறுப்பு வகித்து மக்கள் பணியாற்றியவர்.

1966ல் விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**